அஞ்சலி : அறிஞர் நுணாவிலூர் கா .விசயரத்தினம் !

Written by - வ.ந.கிரிதரன் -
Saturday, 07 October 2017 15:58 - Last Updated Tuesday, 10 October 2017 16:26

எழுத்தாளர் நுணாவிலூர் கா.விசயரத்தினம் அவர்கள் அமரரான தகவலை முகநூல் மூலம் சற்று முன்னர் அறியத்தந்திருந்தார் எழுத்தாளர் உதயணன் அவர்கள். அதிர்ச்சியாகவிருந்தது. 'பதிவுகள்' இணைய இதழுக்கு ஆக்க, ஊக்கப்பங்களிப்பு வழங்கிய நல்ல உள்ளத்தை நாம் இழந்து விட்டோம். 'பதிவுகள்' இணைய இதழுக்குத் தொடர்ச்சியாகத் தனது சங்கத்தமிழ் இலக்கியம் பற்றி ஆக்கங்களை அனுப்பிக்கொண்டிருந்தவர். அதற்காகவே 'பதிவுகள்' இணைய இதழில் அவருக்கென்றொரு பக்கத்தையும் உருவாக்கியிருந்தோம். அவரது படைப்புகள் சிலவற்றை 'பதிவுகள்' இணைய இதழின் 'நுணாவிலூர் கா.விசயரத்தினம் பக்கம்' பக்கத்தில் வாசிக்கலாம். அதற்கான இணைப்பு:
http://www.geotamil.com/pathivukalnew/index.php?option=com_content&view=section&layout=blog&id=43&Itemid=73

'பதிவுகள்' இணைய இதழுக்கான ஆலோசகர் குழுவிலும் ஒருவராக விளங்கிய அமரர் நுணாவிலூர் கா. விசயரத்தினம் அவர்கள் 'பதிவுகள்' இதழுக்கு எப்பொழுதும்

1 / 5

அஞ்சலி : அறிஞர் நுணாவிலூர் கா .விசயரத்தினம் !

Written by - வ.ந.கிரிதரன் -
Saturday, 07 October 2017 15:58 - Last Updated Tuesday, 10 October 2017 16:26

ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்கியவர். கணக்கியல் பட்டதாரியான இவர் தன் ஓய்வுக் காலத்தைச் சங்ககாலத் தமிழர்தம் இலக்கியத்தின் பால் திருப்பி ஆக்கபூர்வமாகத் தன் வாழ்வை மாற்றியவர். இத்துறையில் பல நூல்களை வெளியிட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. அண்மையில் இவர் எழுதி ஒன்பதாவது நூலாக வெளிவந்த 'சங்ககாலத் தமிழர் வாழ்வியல்' நூலுக்கு 'சுய வாசிப்புடன் கூடிய ஆய்வுப் புலமை, தெளிந்த இலகுவான மொழிநடை மிக்க நுணாவிலூர் கா.விசயரத்தினத்தின் எழுத்தாற்றல்' என்றொரு கட்டுரையினையும் எழுதியிருந்தேன். அதனை அவர் அந்நூலின் ஆய்வுக் கட்டுரையாகப் பிரசுரித்திருந்தார்.

அமரர் நுணாவிலூர் கா.விசயரத்தினம் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தவர்கள், உற்றார் உறவினர்கள், நண்பர்களுடன் 'பதிவுகள்' இணைய இதழும் இணைந்து கொள்கின்றது. 'பதிவுகள்' இணைய இதழுக்குத் தம் இறுதிவரையில் பங்களிப்புச் செய்த அமரர் வெங்கட் சாமிநாதனைப்போல் பங்களிப்புச் செய்தவர் அமரர் நுணாவிலூர் கா. விசயரத்தினம் அவர்கள். 'பதிவுகள்' இணைய இதழ் மீது மதிப்பினையும், என் மேல் அன்பினையும் வைத்திருந்த நல்ல உள்ளமொன்றினை இழந்து விட்டோம்.

அவரது படைப்புகளினூடு அவர் தொடர்ந்தும் இலக்கியத்தில் நிலைத்து நிற்பார். அவர் நினைவாக அவரது 'சங்ககாலத் தமிழர் வாழ்வியல்' நூலுக்கான முன்னுரையினை மீள்பதிவு செய்கின்றோம்.

மீண்டுமொருமுறை தனிப்பட்டரீதியிலும், 'பதிவுகள்' சார்பிலும் என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முகநூலில் அமரர் நுணாவிலூர் கா .விசயரத்தினம் அவரது மறைவினையோட்டிப் பலர் தமது அனுதாபங்களைத் தெரிவித்திருந்தார்கள் . சிலர் தமது எண்ணங்களையும் பதிவு செய்திருந்தார்கள் . அவற்றில் சில ஒரு பதிவுக்காக இங்கு பிரசுரமாகின்றன . எழுத்தாளர் முருகபூபதியும் மின்னஞ்சல்வாயிலாகத் தன் அனுதாபத்தைப் பகிர்ந்துகொண்டிருந்தார் .

எழுத்தாளர்முருகபூபதி :அன்புள்ள நண்பர் கிரிதரனுக்கு, நுணாவிலூர் விசயரத்தினம் அவர்களின் மறைவுச் செய்தி தங்கள் அஞ்சலி ஊடாகவே தெரிந்துகொண்டேன். எனது அஞ்சலியைத் தெரிவிக்கின்றேன். அவர் பற்றிய விரிவான வாழ்க்கை சரிதம் வெளிவருதல் நன்று. உங்களுக்கு அவரைப் பற்றி நன்கு தெரிந்திருக்கிறது என்பது உங்கள் சில பதிவுகளிலிருந்து அறிகின்றேன். அவர் எங்கு வாழ்ந்தார்..? எவ்வாறு மறைந்தார்? முதலான விபரங்களை பதிவகள் வாசகர்களுக்கு அறியத்தாருங்கள். நன்றி.
அன்புடன் - முருகபூபதி -letchumananm@gmail.com

எழுத்தாளர் முல்லை அமுதன் :காற்றுவெளிக்கும் தொடர்ச்சியாக எழுதி வந்தவர்.அவரின்

2 / 5

அஞ்சலி : அறிஞர் நுணாவிலூர் கா .விசயரத்தினம் !

Written by - வ.ந.கிரிதரன் -
Saturday, 07 October 2017 15:58 - Last Updated Tuesday, 10 October 2017 16:26

எழுத்திற்கு பல பரிசில்களையும் ,விருதுகளையும் பெற்றிருக்கிறார் . இரண்டு மூன்று வாரங்களாக தொலைபேசி அழைப்பும் கிடைக்கவில்லை.
தற்போது தான் செய்த பார்த்தேன் . அதிர்ச்சியாக இருந்தது. உறவுக்காரரும் கூட, அவரின் குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த இரங்கல்கள் .

Prof. Kopan Mahadeva: Just five minutes ago I returned from a Function of Drieberg College Old Boys & Teachers Association and clicked my Facebook Account and read of my Good Fiend's Demise as announced by Giritharan Navaratnam, Editor of Pathivukal and our Facebook Friend. In fact both Mr. Karthigeyan Wijeyaratnam and I are Past Pupils of Drieberg College. He studied ONLY at Drieberg College before heentered Government Service. He and I used to call each other almost daily before he entered Hospital. His daughter Malar rang and informed me about that. Now I am really shocked to learn of his demise. He was the Coordinator of our ELAB of which I am Chairman. Now I have lost my Right Hand. I rush to type this long comment on Giritharan's Time Line and am going to bed because I am very sleepy. Meanwhile May He Rest in Peace. -- Prof. Kopan Mahadeva.

பாலா ராம் (Bala Ram):
நேற்றுப்போல்
இருக்கிறது.
அவரது சந்திப்புகள் .
ஈழத்து மூத்ததலைமுறை
இன்று கண்மூடித்
தூங்குகின்றது!
ஈழவர் இலக்கிய வட்ட
உறுப்பினர் (ELAB)
சங்கஇலக்கியம் முதல் ஆங்கில இலக்கணம் வரை அத்துப்படி!
"மூத்த தலைமுறைகள்
இன்னும் சில காலம்
இருந்திடனும் ,நம் இளம்
தலைமுறைகள்
இசைக்கின்ற மாவீரர்
புகழ் பாடல் கேட்டிடனும் !
ஈழம் விடிந்தது எனும்
செய்தி வந்துடனும் !"
இறப்பும் , பிறப்பும்
நயதிதான் ஆனாலும்
நுணாவிலூர்
கா.விசயரத்தினம்
ஐயாவின் இழப்பு ஒரு
வற்றாத நதியாக
மாவலி முதல்
தேம்ஸ் வரை
அழகு தமிழை
அள்ளி அள்ளித்
தெளித்த நதியொன்று
வற்றிவிட்டது.

3 / 5

ஆழ்ந்த இரங்கலதை் தரிவித்தாக் கொள்ள
வார்த்தகைள் இல்லை!
வாசகர் வட்டத்தில்
கோபனின் இல்லத்தில்
கட்ட தனே் சுவை
இன்னும் காதில்
இனிக்கிறது.
Rip

[illegible] [illegible]:ஆழ்ந்த அனுதாபம் .ஒருவர் மரிக்கலாம் .ஆனால் அவர் பதிந்து சனெ்ற இலக்கியங்கள் இறப்பதில்லை .,

பாடும் மீ ன் சிறீ ஸ்கந்தராஜா: ஆழ்ந்த இரங்கல். அவரது ஆன்மா இறவைன் திருவடிகளில் இளைப்பாறட்டும்.

[illegible] [illegible]:அன்னாரின் ஆத்மா சாந்தியடயை அவர் நசேித்த சங்ககால இலக்கியத்தபை் பிரார்த்திக்கின்றோம்.

[illegible] [illegible] [illegible], [illegible] [illegible] [illegible] [illegible] [illegible].[illegible] [illegible]!

- [illegible] -

அஞ்சலி : அறிஞர் நுணாவிலூர் கா .விசயரத்தினம் !

Written by - வ.ந.கிரிதரன் -
Saturday, 07 October 2017 15:58 - Last Updated Tuesday, 10 October 2017 16:26

[illegible]

5 / 5